மோட்டார்கள் இயங்குவதில்லை. அதற்குக் காரணம், அந்தப் பகுதியில் 120 அடியில் இருந்து 150 அடிக்குக் கீழேதான் நீர்மட்டம் இருக்கிறது. எனவே இப்படி நீர் மட்டம் மிகவும் ஆழமாக இருக்கக் கூடிய அந்தப் பகுதிகளில் ஜெட் மோட்டார்களை வைத்தால் தண்ணீர் எடுக்காது என்று சொல்லு கிறார்கள் எனவே அந்த ஜெட் மோட்டார்களை அகற்றிவிட்டு, சப்-மெர்சிபிள் மோட்டார்களைப் பொருத்தினால்தான், இப்படிப் பட்ட வறட்சிக் காலங்களில் நிரந்தரமாக அவர்களுக்குக் குடிநீர் கொடுக்க முடியும் என்பதால், வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஜெட் மோட்டார்களை அகற்றிவிட்டு, சப்-மெர்சிபிள் மோட்டார்களைப் பொருத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு ஓ.எச்.டி. (ஓவர் ஹெட் டாங்க்ஸ்) இருந்து செயல்பட்டாலும், பைப்லைன் போடாமல் இருக்கிறது. சிலம்பூர் ஆதி திராவிடர் காலனி, இளையூர் மேலவெளி, கூவத்தூர் மேலத்தெரு, விருதுடையான் ஆகிய இடங்களில் பைப் லைன் போட்டு, அந்தத் திட்டத்தை செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியில் சாலைகள் மிகவும் சீர்கேடாக இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் மாத்தூர்-சிலுப்பனூர் சாலை இல்லாமல் அந்தப் பகுதி தீவுபோல் காட்சி அளிக்கிறது. அந்தச் சாலையை உடனடியாக தார் சாலையாக மாற்றினால் அந்தப் பகுதியில் இருக்கக்கூடியவர்களுக்கு பேருந்து வசதி கிடைக்கும் நிலை ஏற்படும். ஸ்ரீமுஷ்ணம்-கருக்கை-அழகாபுரம்-திருக்கோணம்-பாசிளம் சாலையை தார் சாலையாகப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரெட்டிதத்தூர்-தென்னூர், வாரியங்காவல்-வீராக்கன். பெரியதத்தூர்-நெட்டியக் குறிச்சி சாலைகளையும் அமைத்துத் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றிகூறி, முடிக்கிறேன்.

7. அறிவிப்பு.

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் துணைத் தலைவர்] [1987 மார்ச் 27

மானியக் கோரிக்கைகள் எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் மற்றும் 35—நுகர்பொருள் வழங்கல் 9—4—1987 ஆம் தேதியன்றும், மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு 11—4—1987 ஆம் தேதியன்றும் விவாதத்திற்கும், வாக்கெடுப்பிற்கும் எடுத்துக் கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (28—3—1987) காலை 10 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.07 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

ஏதுமில்லை

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

81. இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் 1973-74 ஆம் ஆண்டுக்கான அறிக்கை (வருவாய் வாவினங்கள்) குறித்து பொதுக் கணக்குக் குழுவின் ஐந்தாம் அறிக்கை (1977-78) பத்தொன்பதாம் அறிக்கை (1982-83) ஆகியவற்றில் உள்ள பரிந்துரைகள் மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை குறித்து பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்திநான்காவது அறிக்கை.

82. 1979-80 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் அறிக்கையில் பொதுப் பணித்துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தைந்தாவது அறிக்கை.

83. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தேழாவது அறிக்கை

84. குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (முதல் பட்டியல்).